

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி (MPLADS) மற்றும் சென்னை துறைமுகத்தின் சமூக பாதுகாப்பு நிதியின் மூலம் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு – 48, புத்தா தெருவில் ரூபாய் 4 கோடியே 26 லட்சங்கள் மதிப்பீட்டில் புதிதாக அமையவுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டும் பணிக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர்கள் வ.பெ. சுரேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் தா. இளைய அருணா எம்.சி., மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி கணேசன், மாமன்ற உறுப்பினர் திருமதி. விஜயலட்சுமி விஜயகுமார், வட்டக் கழகச் செயலாளர்கள் பாலன், ரவி விஜயகுமார், மற்றும் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், மண்டல அலுவலர்கள், மாநகராட்சி அதிகாரிகள், மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.



ஈரோடு மாவட்டம் மேட்டுநாசுவம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், குப்பைகளை தரம் பிரிக்கும் வாகனங்களின் சேவையினை வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, திட்ட இயக்குனர் ( மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மா.பிரியா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமாசங்கர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கரூரில் ரூ.58.25 கோடியில் திட்டப் பணிகள் திறப்பு:

# ரூ.3.35 கோடியில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல்! ரூ.162.22 கோடியில் 18,332 பயனாளிகளுக்கு நல உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**கரூர், ஜூலை 11**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கரூர் புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட 58.25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 3.35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 18,332 பயனாளிகளுக்கு 162.22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2025) கரூர் திருமாநிலையூரில் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்தை, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிர்வாகத் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறைகளின் சார்பில் (கரூர் புதிய பேருந்து நிலையம் உள்பட) 58.25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் வைரமடையில் காவிரி மீட்புக் குழுவின் உறுப்பினர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.முத்துசாமி அவர்களுக்கு திருவுருவ சிலை அமைக்கும் பணி, அரவக்குறிச்சி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி மற்றும் கிருஷ்ணராயபுரம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி என மொத்தம் 3.35 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 13,124 பயனாளிகளுக்கு 115.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனை பட்டாக்களையும், 20 நபர்களுக்கு திருமண உதவித்தொகை, தற்காலிக இயலாமைக்கான உதவித் தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை காசோலைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 61 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 15 நபர்களுக்கு 7.34 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

**புதிய மின்னணு குடும்ப அட்டைகள்!**

தொடர்ந்து 1,095 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களையும், 10 பயனாளிகளுக்கு திரவ எரிவாயு சலவைப் பெட்டிகளையும், 30 பயனாளிகளுக்கு சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் அட்டைகளையும், முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மூலம் 114 முஸ்லீம் மகளிருக்கு உதவித் தொகை காசோலைகளையும், தாட்கோ திட்டத்துறையின் சார்பில் முதலமைச்சரின் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 8 பயனாளுக்கும், மகளிர் சுய உதவிக் குழு பொருளாதார கடனுதவித் திட்டத்தின் கீழ் 24 சுய உதவிக் குழுக்களுக்கும் நலத்திட்ட உதவிகளையும் துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

வேளாண்மைத் துறையின் சார்பில் 280 பயனாளிகளுக்கு மானாவாரி பகுதி மேம்பாடு ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகளையும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 5 நபர்களுக்கு ஒய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளையும், மகளிர் திட்டத்தின் கீழ் 76 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 415 மகளிருக்கு 7.21 கோடி ரூபாய்க்கான வங்கி கடன் இணைப்புகளையும் வழங்கினார்.

**பயனாணிகளுக்கு நல உதவிகள்!**

தோட்டக்கலைத் துறையின் சார்பில் நுண்ணீர் பாசனத் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம், தேசிய தோட்டக் கலை இயக்கம் ஆகியவற்றின் கீழ் 340 பயனாளிகளுக்கு 1.92 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் பயிர் கடன், கால்நடை பராமரிப்புக் கடன், மத்திய காலக் கடன், மகளிர் சுய உதவிக் குழுக்கடன், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன், தாட்கோ திட்ட கடன் என மொத்தம் 2,069 பயனாளிகளுக்கு 20.19 கோடி ரூபாய்க்கான கடனுதவிகளையும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் மூலம் 378 குழந்தைகளுக்கு நிதி ஆதரவுத் திட்டத்தின் கீழ் பராமரிப்பு உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், பவர் டில்லர், பவர் வீடர் ஆகிய நலத்திட்ட உதவிகளையும், 5 மாணவர்களுக்கு கல்வி கடனுதவிகளையும், கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 150 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளையும், ஊரக வீடுகள் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் 160 பயனாளிகளுக்கு வீடுகளை பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கான ஆணைகளையும், தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தின் சார்பில் ஒரு நபருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும் என இவ்விழாவில் மொத்தம் 18,332 பயனாளிகளுக்கு 162.22 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி. செ. ஜோதிமணி, கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், ஆர். இளங்கோ, திருமதி க. சிவகாம சுந்தரி, மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், மேயர் திருமதி. க. கவிதா, துணை மேயர் ப. சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி ஸ்ரீலேகா தமிழ்செல்வன், மாநகராட்சி ஆணையர் திருமதி.கி.மு.சுதா, குளித்தலை சார் ஆட்சியர் திருமதி. தி. சுவாதி ஸ்ரீ, கோட்டாட்சியர் மு. முகமது பைசல் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மேயர் திருமதி ஆர். பிரியாவுடன் நேற்று (10.07.2025), லயோலா கல்லூரியில் முதுகலை (சமூகப் பணி) பயிலும் மாணவ, மாணவியர் சந்தித்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாகச் செயல்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்படும் பணிகள், சமூக ஆர்வலர்களின் பங்களிப்பு குறித்து கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில், லயோலா கல்லூரியின் பேராசிரியர் திருமதி சக்தி தேவி, உதவிப் பேராசிரியர் தீபக் நாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

### மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில்

# பௌர்ணமி தின திருவிளக்கு வழிபாடு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!



*சென்னை,ஜூலை.11-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் நேற்று (10.07.2025) மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் உள்பட 5 திருக்கோயில்களில் பௌர்ணமி தின 108 திருவிளக்கு வழிபாட்டினை தொடங்கி வைத்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் கட்டணமில்லா திருமணங்கள், மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகிய புனித தலங்களுக்கு செல்பவர்களுக்கு அரசு மானியம், மூத்தக் குடிமக்கள் பயன்பெறும் வகையில் ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கும், அறுபடை வீடுகளுக்கும், இராமேசுவரத்திலிருந்து காசிக்கும் கட்டணமில்லா ஆன்மிகப் பயணம், நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் மற்றும் ஒருவேளை அன்னதானத் திட்டம் விரிவாக்கம் என பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், மகளிருக்கு சுய உதவிக் கடன் தள்ளுபடி, மகளிர் உரிமைத்தொகை ரூபாய் ஆயிரம், விடியல் பயணம் என பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை செயல்படுத்தியது போல் இந்து சமய அறநிலையத்துறையில் சுமங்கலி பெண்களுக்கு பௌர்ணமி தின திருவிளக்கு வழிபாடு, இந்தாண்டிலிருந்து 5 வாரத்திற்கு 10,000 சுமங்கலி பெண்களுக்கு இலவசமாக மங்கலப் பொருட்களை வழங்குகின்ற திட்டம் போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம்.

பௌர்ணமி தின திருவிளக்கு வழிபாடானது தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் திருக்கோயில் 14.06.2022 அன்று 12 திருக்கோயில்களில் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2023 - 2024 ஆம் ஆண்டில் 5 திருக்கோயில்களுக்கும், 2024 - 2025 ஆம் ஆண்டில் 3 திருக்கோயில்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு மொத்தம் 20 திருக்கோயில்களில் நடைபெற்று வந்தது. இதன்மூலம் 65,340 பெண்கள் பலனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்கான செலவில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே, அதாவது ரூ.200 மட்டுமே பெண் பக்தர்களிடமிருந்து பெறப்பட்டு வந்தது. இதற்கான கட்டணத்தை ரூ.100 ஆக குறைத்திட முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இந்த கட்டணக் குறைப்பு அடுத்த மாதத்திலிருந்து 25 திருக்கோயில்களிலும் செயல்படுத்தப்படும். இன்றைய தினம் மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில், வீரபாண்டி, கௌமாரியம்மன் திருக்கோயில், மேச்சேரி, பத்ரகாளியம்மன் திருக்கோயில், பழனி, மாரியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர், மதுரகாளியம்மன் திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களில் பௌர்ணமி தின விளக்கு வழிபாடு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்து 25 திருக்கோயில்களில் இத்திட்டம் இன்றுமுதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றபின், இன்றுவரை 3,297 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. வருகின்ற 13-ஆம் தேதி 28திருக்கோயில்களுக்கும், 14-ஆம் தேதி திருப்பரங்குன்றம் உள்ளிட்ட 46 திருக்கோயில்களுக்கும் குடமுழுக்கு நடைபெற உள்ளது. இந்தாண்டு இறுதிக்குள் 3,500 திருக்கோயில்களை எட்டும் என்று தெரிவித்தார்.

# குடிநீர் வாரிய பகுதி அலுவலகங்களில் குறை தீர்க்கும் கூட்டம்!

### சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்!

*சென்னை,ஜூலை.11-*

சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 12.07.2025 (சனிக்கிழமை) அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 12.07.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்-1 - திருவொற்றியூர், பகுதி அலுவலகம்-2 - மணலி, பகுதி அலுவலகம்-3 - மாதவரம், பகுதி அலுவலகம்-4 - தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்-5 - இராயபுரம், பகுதி அலுவலகம்-6 - திரு. வி.க.நகர், பகுதி அலுவலகம்-7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம்-8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம்-9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்-10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்-11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம்-12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம்-13 - அடையாறு, பகுதி அலுவலகம்-14 - பெருங்குடி, பகுதி அலுவலகம்-15 - சோழிங்கநல்லூர்,

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

### டி.ராஜாராம் ஏற்பாட்டில்

# புழல் 23வது வட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்த்தல்!

### வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு அறிக்கை!

*சென்னை, ஜூலை 11-*

வட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் டி.ராஜாராம் ஏற்பாட்டில், ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பில் புழல் 23வது வட்டம் பாகம் எண் 249 இல் வீடு வீடாக சென்று கழக உறுப்பினர் சேர்க்கும் பணி இன்று (11.07.2025 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு நடைபெற உள்ளது, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் அவர்களின் வழி காட்டுதலின்படி,இந்த 23 வது வட்டத்திற்கு உட்பட்ட, வட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள். இன்னால் முன்னாள் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும், புழல் 23வது வட்டம் பாகம் எண் 249 இல் வீடு வீடாக சென்று கழக உறுப்பினர் சேர்க்கும் பணி இன்று (11-07-2025 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 13வது வார்டு செயலாளர் கேபிள் டிவி எம்.ராஜா ஏற்பாட்டில் பகுதி செயலாளரும் மண்டலக் குழுத்தலைவருமான தி.மு.தனியரசு ஓரணியில் தமிழ்நாடு எனும் உறுப்பினர் சேர்க்கும் பணியை வீடு வீடாக சென்று திமுக அரசின் சாதனைகள் மற்றும் மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களை எடுத்துரைத்து மகளிர் உரிமைத்தொகை வராதவர்களுக்கு வருகின்ற 15ஆம் தேதி விண்ணப்பங்கள் வழங்க உள்ளதையும் எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் ரா.சுசிலா ராஜா, கே.பிரபாவதி, டி.ஏ.ராஜி, ஆர்.ரஜினிபாபு , கே.கார்த்திகேயன், கே.ஜானகிராமன், எஸ்.விஜயலட்சுமி, எம்.மனோகரன், டி.எஸ்.பிரசாத், டி.கதிரவன், வே.இளங்கோவன், பி.சரவணகுமார், ஆர்.ரவிச்சந்திரன், கே.ஜெயகுமார், என்.ஆர்.கபிலன், எஸ்.யோகானந்தம், தமிழ்செல்வன், எழிலன், மதன், உட்பட மாவட்ட பகுதி வட்ட திமுக நிர்வாகிகள் (பி.எல்.சி) துணை பாக முகவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.